ஆழகான திருநாட்டில் துயர் மேகங்கள் எம்
தமிழீழ திசை எங்கும் கரு நாதங்கள்  2
தளிரோடு கருக்கள் எல்லாம் சாய்கின்றதே 2
எங்கள் தாய் நிலத்தில் குருதி வெள்ளம் பாய்கின்றதே

ஆழகான திருநாட்டில் துயர் மேகங்கள் எம்
தமிழீழ திசை எங்கும் கரு நாதங்கள்

குயில்கள் பாடும் குளிர்ந்த சோலை தீயில் வேகின்றதே குல
கொடிகள் சாய்கின்றதே 2
பயிர்கள் ஆடும் வயலில் களைகள் 2
ஓங்கி வளர்கின்றதே பெரும் கொடுமை விழைகின்றதே

ஆழகான திருநாட்டில் துயர் மேகங்கள் எம்
தமிழீழ திசை எங்கும் கரு நாதங்கள்

குளகோசன் அரசாண்ட தெரு நாட்டினிலே
பகை பேய்கள் ஆழ்கின்றதே 2
வளங்கள் யாவும் தமது ஆக்கி 2
அவைகள் ஆடிடவே நாம் வதங்கி வாடுவதோ

ஆழகான திருநாட்டில் துயர் மேகங்கள் எம்
தமிழீழ திசை எங்கும் கரு நாதங்கள்

எடு நீ வாழை களத்தில் ஆடு பகைவர் ஓடிடவே
சூழ்ந்த இருள்கள் விலகிடவே 2
விடியல் ப+க்க  மிடிமை நீக்கி
மகிழ்வில் ஆடிடுவோம் வெற்றி மாலை சூடிடுவோம்

ஆழகான திருநாட்டில் துயர் மேகங்கள் எம்
தமிழீழ திசை எங்கும் கரு நாதங்கள்  2
தளிரோடு கருக்கள் எல்லாம் சாய்கின்றதே 2
எங்கள் தாய் நிலத்தில் குருதி வெள்ளம் பாய்கின்றதே